RNI-NO: TNTAM/2021/83936

Postel Regd. No: TN/5/SVA/2023-2025




# மாலை தந்தி

MALAI THANTHI

தமிழால் வெல்வோம்

DAILY EVENING

மாலை நாளிதழ்




சிவகங்கை மலர்-4 இதழ்- 255 செப்டம்பர்.16 2025 செவ்வாய்கிழமை malaithanthi2020@gmail.com 4 பக்கங்கள் விலை ரூ. 5



## சிவகங்கை பேரறிஞர் அண்ணா சிலைக்கு மரியாதை... உறுதிமொழி ஏற்பு

சிவகங்கை, செப்.16-

சிவகங்கை நகர வார்டுப்பகுதிகளான மன்னர் கல்லூரி , ஆர். சி. நடுநிலைப்பள்ளி , நடேசன் செட்டியார் பள்ளி, ஆர். ஆர். கே பள்ளி , மருதுபாண்டியர் பள்ளி , மன்னர் பள்ளி, பெண்கள் மேல்நிலைப் பள்ளி ஆகிய பகுதிகளில் பேரறிஞர் அண்ணா அவர்களின் திரு உருவப்படத்திற்கு மலர்தூவி மரியாதை செலுத்தப்பட்டது...

பொதுமக்கள் மற்றும் பள்ளி மாணவ மாணவியருக்கு இணிப்புகள் வழங்கி ஊர்வலமாக வந்து சேர்மன் துரை ஆனந்த் தலைமையில் பேரறிஞர் அண்ணாசிலைக்கு மாலை அணிவித்து மரியாதை செலுத்தப்பட்டது...

அந்தந்த பகுதிகளில் நடைபெற்ற பிறந்தநாள் விழாவில் ஓரணியில் தமிழ்நாடு உறுதிமொழியும் ஏற்கப்பட்டது...

இந்த நிகழ்ச்சியில் கழக கொள்கைபரப்பு துணைச்செயலாளர் முனைவர் தமிழ்ப்ரியா வேங்கை பிரபாகரன் , திட்டக்குழு உறுப்பினர் நகர்க்கழக துணைச் செயலாளர் வீணஸ் இராமநாதன் ,வைஸ் சேர்மன் வழக்கறிஞர் கார்கண்ணன் ,கேப்டன் இரா. வி. சரவணன் , மாவட்ட செய்தித் தொடர்பான அயூப் கான், மாவட்ட மகளிரணி பவானி கணேசன், மாவட்ட வர்த்தக அணி தனசேகரன், வழக்கறிஞர் இராஜ அமுதன்,ஒமேகா திலகவதி கண்ணன் , தொகுதி ஐடி விங் நிர்வாகிகள் சதீஷ்குமார் , முப்பையூர் சிவா,நகர் இளைஞரணி பரத் சேகர் , பொறியாளர் பிரபாகரன் , அருண்குமார், ஆறு. சரவணன், வீரகாளை , திராவிடர் கழகம் சார்பில் மாவட்டக் காப்பாளர் வழக்கறிஞர் இன்பலாதன் , திக மாவட்டத்தலைவர் இரா. புகழேந்தி , நகர நிர்வாகிகள் ஆர். டி.சேகர், சுக்ரா சரவணன், விஜயகுமார், துபாய் காந்தி,முத்துமணி , கார்த்திக் பிச்சை, கீழக்குளம் சேகர் ,சுப. ஜெயக்குமார்,கண்மணி, நாச்சியப்பன் , சேது ,சௌந்தர், தேவஸ்தானம் முருகேசன், கணேசன் உள்ளிட்ட நகர நிர்வாகிகள் ஏராளமானோர் கலந்து கொண்டனர்..





## அண்ணாவின் 117வது பிறந்த நாள்: இபிஎஸ் தலைமையில் அதிமுகவினர் மரியாதை

சென்னை: செப்.16-

அண்ணாவின் 117வது பிறந்த நாளையொட்டி, அவரது திருஉருவச் சிலைக்கு எடப்பாடி பழனிசாமி தலையிலான அதிமுகவினர் மலர் தூவி மரியாதை செலுத்தினர்.

இது குறித்து அக்கட்சி சார்பில் வெளியிட்டுள்ள செய்திக்குறிப்பில்: "பேரறிஞர் அண்ணாவின் 117 வது பிறந்த நாளான இன்று காலை (15.9.2025 ஞ் திங்கட் கிழமை), சென்னை அண்ணாசாலையில் உள்ள பேரறிஞர் அண்ணாவின் திருஉருவச் சிலையின் கீழ் அலங்கரித்து வைக்கப்பட்டிருந்த அவரது திருஉருவப் படத்திற்கு, அ.இ. அதிமுக பொதுச் செயலாளரும், சட்டமன்ற எதிர்க்கட்சித் தலைவருமான எடப்பாடி பழனிசாமி மலர் தூவி மரியாதை செலுத்தினார்.

அவரை தொடர்ந்து, தலைமைக் கழகச் செயலாளர்களும் மலர் தூவி மரியாதை செலுத்தினார். இந்த நிகழ்வில், மாவட்டக் கழகச் செயலாளர்கள், நாடாளுமன்ற, சட்டமன்ற உறுப்பினர்கள், முன்னாள் அமைச்சர்கள், மற்றும் அதிமுக தொண்டர்கள் உள்ளிட்டோர் கலந்துகொண்டு சிறப்பித்தனர்'' என்று செய்திக்குறிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது.



■ வேலூர் மாவட்டம், சத்துவாச்சாரி, மாவட்ட ஆட்சியர் அலுவலக காயிதே மில்லத் கூட்டரங்கில் நடைபெற்ற மக்கள் குறைதீர்வு நாள் கூட்டத்தில் மாவட்ட ஆட்சியர் சுப்புலெட்சுமி, பொதுமக்களிடமிருந்து 398 மனுக்களை பெற்று சம்பந்தப்பட்ட துறை அலுவலர்களிடம் வழங்கி நடவடிக்கை எடுக்க உத்தரவிட்டார். இக்கூட்டத்தில் மாவட்ட வருவாய் அலுவலர் மாலதி, மாவட்ட ஆதிதிராவிடர் நலத்துறை அலுவலர் எஸ்.ஆர்.என். மதுசெழியன், தனித்துணை ஆட்சியர் (ச.பா.தி) கலியமூர்த்தி, மாவட்ட பிற்படுத்தப்பட்டோர் நலத்துறை அலுவலர் ஜெயசித்ரா மற்றும் துறை சார்ந்த அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

# “இது என்ன, வாக்கரசியலுக்காக செய்வதா?” : ‘அன்புக்கரங்கள்’ திட்ட தொடக்க விழாவில் முதலமைச்சர் பதிலடி!

சென்னை, செப்.16-

தமிழ்நாடு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் சென்னை, கலைவாணர் அரங்கத்தில், சமூக நலன் மற்றும் மகளிர் உரிமைத் துறையின் சார்பில், பெற்றோர்கள் இருவரையும் இழந்த மற்றும் பெற்றோரில் ஒருவரை இழந்து, மற்றொரு பெற்றோரால் பராமரிக்க இயலாத குழந்தைகளை அரவணைத்து தொடர்ந்து பாதுகாத்திடும் வகையில், அக்குழந்தைகளின் 18 வயது வரையிலான பள்ளிப் படிப்பு முடியும் வரை இடைநிற்றல் இன்றி கல்வியை தொடர மாதம் 2,000 ரூபாய் உதவித்தொகை வழங்கிடும் “அன்புக்கரங்கள்” திட்டத்தை தொடங்கி வைத்து, அக்குழந்தைகளுக்கு உதவித் தொகையினை வழங்கினார்.

பின்னர் நிகழ்ச்சியில் முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் ஆற்றிய உரை பின்வருமாறு:

இனிமேல், நீங்கள் கவலைப்பட வேண்டாம்! உங்களை இன்னும் கவனித்துக் கொள்ளத்தான் இந்த அன்புக் கரங்கள் திட்டத்தைத் தொடங்கி இருக்கிறோம். நான் இருக்கிறேன்ஞ் உங்களை பத்திரமாக பார்த்துக் கொள்வேன்!

இன்றைக்கு மிகவும் முக்கியமான நாள்! பேரறிஞர் அண்ணா அவர்களின் பிறந்தநாள்! நம்முடைய தாய் நிலத்துக்கு “தமிழ்நாடு” என்று பெயர் சூட்டிய தமிழ்த்தாயின் தலைமகன் அவருடைய பிறந்த நாள்! “ஏழையின் சிரிப்பில் இறைவனை காண்போம்” என்று திராவிட மாடல் ஆட்சிக்கு இலக்கணம் எழுதிய மாபெரும் தலைவரின் பிறந்தநாள்!

இன்று, இந்தத் திட்டத்தை தொடங்கி வைத்து, இங்கு பேசிய குழந்தைகளின் சிரிப்பு தான் அண்ணா அவர்களுக்கு நாங்கள் செலுத்துகின்ற மரியாதை. மிகுந்த மனநிறைவையும், மகிழ்ச்சியையும் அடைந்து கொண்டிருக்கிறேன்!

திராவிட மாடல் என்றால் ‘எல்லோருக்கும் எல்லாம்’ என்று எளிமையாக விளக்கம் சொல்லிவிடலாம். ஆனால், எல்லாருக்கும் எல்லாம் கிடைப்பது உழைப்பதும், பாடுபடுவதும் எளிதானது அல்ல!

இந்திய சமூகச் சூழலில், இவர்களுக்கெல்லாம் எதுவுமே தெரியாது தெரியக் கூடாது என்று ஒடுக்கப்பட்ட சாமானிய மக்களின் எழுச்சிதான், திராவிட இயக்கம்! அதனால்தான், மக்களோடு மக்களாக, மக்களுடைய குரலாக திராவிட முன்னேற்றக் கழகம் இன்றைக்கு ஒலித்துக் கொண்டிருக்கிறது!

மக்களுடைய தேவைகளை, இந்த சமூகத்துக்கு தேவையான மாற்றங்களை, ஆட்சிப் பொறுப்பைப் பயன்படுத்தி இன்றைக்கு நாங்கள் செய்து கொண்டிருக்கிறோம்! அரசியல் என்பது மக்கள் பணி! அது கடுமையான பணி! எங்களைப் பொறுத்தவரைக்கும், இங்கே சொகுசுக்கு இடமில்லை!



நீங்களே பார்த்துக் கொண்டிருப்பீர்கள். காலையில் ஒரு இடத்தில் மக்கள்கூட பேசிக் கொண்டிருப்பேன். ஈவினிங் பல நூறு கிலோமீட்டர் கடந்து இன்னொரு ஊரில்ஞ் இன்னொரு பகுதியில் மக்கள்கூட இருப்பேன். இந்த உழைப்பைத்தான், தந்தை பெரியார் பேரறிஞர் அண்ணா முத்தமிழறிஞர் கலைஞர் ஆகியோர், எங்களுக்கு கற்றுத் கொடுத்திருக்கிறார்கள். இப்படி எப்போதும் மக்களோடு மக்களாக இருக்கின்ற காரணத்தால்தான், கடைக்கோடி மனிதருக்கும் என்ன தேவை என்று பார்த்துப் பார்த்து எங்களால் செய்ய முடிகிறது!

அரசியல் என்றால் பலர் என்ன நினைக்கிறார்கள் என்றால், ஏதோ, ஆட்சிப் பொறுப்புக்கு வந்தோம்; பொறுப்பை மறந்து பதவி மோகத்தில் இருந்தோம்; சில கவர்ச்சித் திட்டங்களை செய்தோம்; மறுபடியும் பதவி மோகத்தோடு தேர்தலுக்கு தயாராவோம் என்று சிலர் நினைக்கிறார்கள். ஆனால், எங்களுடைய அடிப்படையே, “பதவி அல்ல; பொறுப்பு” தான்! அதிகாரம் என்பது சாமானியனுக்காக போராடுவது!

இன்றைக்கு, தாயுமானவர் திட்டத்தின் ஒரு பகுதியாக, இந்த அன்புக்கரங்கள் திட்டத்தைத் தொடங்கி வைத்திருக்கிறோம். இதனால், 6,082 குழந்தைகளுக்கு, மாதந்தோறும் இரண்டாயிரம் ரூபாய் வழங்கப் போகிறோம். இது என்ன, வாக்கரசியலுக்காக செய்வதா?

காலையில் பள்ளிக்கு பசியுடன் வர குழந்தையின் வேதனையைப் பார்த்தேன். காலை உணவுத் திட்டத்தை உருவாக்கினேன். இன்றைக்கு, 21 இலட்சம் குழந்தைகளுக்கு நாள்தோறும் சூடாக, சுவையாக சத்தான உணவை பரிமாறுகிறோம். இது என்ன, வாக்கரசியலுக்காக செய்வதா?

சமூகத்தின் விளிம்பு நிலையில், எண்ணிக்கையில் சில நூறு சில ஆயிரம் மட்டுமே இருக்கின்ற மாற்றுத்திறனாளிகள் திருநர்கள் ஆகியோருக்கும் பார்த்துப் பார்த்துத் திட்டங்களை செயல்படுத்துகிறோம். இது என்ன, வாக்கரசியலுக்காக செய்வதா?

இன்னும் சொல்கிறேன்ஞ் நம்முடைய திராவிட மாடல் அரசு, என்ன மாதிரியான நெருக்கடியில் ஆட்சிப் பொறுப்புக்கு வந்தது என்று உங்கள் அனைவருக்கும் நன்றாக தெரியும்.

கொரோனா பெருந்தொற்று உச்சத்தில் இருந்த காலக்கட்டம் அது! ஏராளமான உயிர்கள் பறிபோனது. பலருடைய தொழில்கள் எல்லாம் முடங்கிப் போனது. பல குடும்பங்கள் தங்களுடைய முதுகெலும்பை இழந்து, பலவீனப்பட்டது. உடனே, இந்தியாவுக்கே முன்மாதிரி அரசாக, கொரோனாவால் பெற்றோரை இழந்த 15 ஆயிரத்து 775 குழந்தைகளுக்கு, 511 கோடியே 27 இலட்சம் ரூபாய் நிவாரணம் வழங்கினோம். இது என்ன, வாக்கரசியலுக்காக செய்வதா? இல்லை.

கொரோனாவால் பெற்றோர் இருவரையும் இழந்த குழந்தைகளுக்கு மாதந்தோறும் மூவாயிரம் ரூபாய் என்று 2021ல் ஆயிரத்து 148 குழந்தைகள் 2022 ல் ஆயிரத்து 112 குழந்தைகள் 2023ல் ஆயிரத்து 12 குழந்தைகள் என்று, மூன்று ஆண்டுகளுக்கு நிதி உதவி வழங்கினோம். இது என்ன, வாக்கரசியலுக்காக செய்வதா? இல்லை.

அரசு சேவை இல்லங்கள் மற்றும் அரசு குழந்தைகள் இல்லங்களில் தங்கியிருக்கின்ற ஆயிரத்து நானூறு பெண் குழந்தைகளுக்கு தற்காப்பு மற்றும் விளையாட்டுப் பயிற்சிகள் வழங்குகிறோம். இதென்ன, வாக்கரசியலுக்காக செய்வதா? இல்லை.

சிறப்பு தத்தெடுப்பு நிறுவனங்களில் இருக்கின்ற ஊட்டசத்து குறைபாடுள்ள குழந்தைகளுக்கு தாய்ப்பால் வழங்க, அனைத்து சிறப்பு தத்தெடுப்பு நிறுவனங்களையும், தாய்ப்பால் வங்கியுடன் இணைத்திருக்கிறோம். இது என்ன, வாக்கரசியலுக்காக செய்வதா? இல்லை.

இப்படி ஏராளமான திட்டங்களை, முன்னெடுப்புகளை எங்களால் பட்டியலிட்டு சொல்லிக் கொண்டே இருக்க முடியும்!

இதற்கும் வாக்கரசியலுக்கும் என்ன தொடர்பு இருக்கிறது? வாக்கு என்பது, மக்களின் நம்பிக்கையை பெற்றதற்கான அடையாளம்! அந்த நம்பிக்கையை பெறும், கொள்கையும், செயல்திட்டமும், உழைப்பும், எங்களிடம் இருக்கிறது!

அந்த நம்பிக்கையினால் பெறப்பட்டிருக்கும் இந்தப் பொறுப்பு, சமூகத்தின் கடைக்கோடி மனிதரையும் கை கொடுத்து மேலே தூக்கி விடுவதற்கான வாய்ப்பு! அந்தக் கையாகத்தான் என்னுடைய கை இருக்கவேண்டும் என்று நினைக்கிறேன்! அப்படிதான், இருந்து கொண்டிருக்கிறது! பெற்றோர் வேலைக்கு செல்கிறார்கள் என்று, குழந்தைகளுக்கு காலை உணவு வழங்குகிறோம்.

பெற்றோரே இல்லாத குழந்தைகளை, சிங்கிள் பேரண்ட் இருக்கின்ற குழந்தைகளை பார்த்துக் கொள்ள வேண்டுமே என்ற எண்ணம் வந்தது. அந்த அடிப்படையில் உருவானதுதான், இந்த அன்புக்கரங்கள் திட்டம்!

இந்தத் திட்டத்திற்காக, மாவட்ட ஆட்சியர்களிடம் சொல்லி, பெற்றோர் இருவரையும் இழந்த குழந்தைகள் பெற்றோரில் ஒருவர் இறந்து, மற்றொருவரால் கைவிடப்பட்ட குழந்தைகள் பெற்றோரில் ஒருவர் இறந்து, மற்றொரு பெற்றோர் மாற்றுத்திறனாளியாக இருப்பவரின் குழந்தைகள் பெற்றோரில் ஒருவர் இறந்து, மற்றொரு பெற்றோர் சிறையில் இருந்தால், அவர்களுடைய குழந்தைகள் பெற்றோரில் ஒருவர் இறந்து, மற்றொரு பெற்றோர் உயிருக்கு ஆபத்தான நோய்களுடன் வாழ்ந்து வருகிறார்கள் என்றால், அவர்களுடைய குழந்தைகள் என்று கணக்கெடுக்கச் சொன்னோம்.


அப்படி முதல்கட்டமாக கண்டறியப்பட்ட 6,082 குழந்தைகளுக்கும், பள்ளி படிப்பை முடிக்கின்ற வரைக்கும் இனிமேல் மாதந்தோறும் இரண்டாயிரம் ரூபாய் உங்கள் வங்கி கணக்கில் வரவு வைத்திடுவோம்!

உங்களுக்கு 18 வயது ஆகின்ற வரைக்கும், நீங்கள் கல்வியை தொடர இந்த உதவித்தொகை வழங்கப்படும்! நீங்கள் பள்ளி படிப்பை முடித்த பிறகு, கல்லூரிக் கல்வி மற்றும் உரிய திறன் மேம்பாட்டு பயிற்சிகளும் வழங்க உரிய நடவடிக்கைகள் எடுக்கப்படும்!

நீங்கள் எல்லோரும் படித்து முன்னேறி வரவேண்டும்! இதுதான் என்னுடைய விருப்பம்; எங்களுடைய இலட்சியம்! இந்த இலட்சியத்துக்கு துணையாகும் நம்முடைய திராவிட மாடல் அரசின் கரம்தான், அன்புக்கரம்!

நாளைக்கு நீங்கள் படித்து, டாக்டராக என்ஜினியராக சயிண்டிஸ்டாக ஐ.ஏ.எஸ், ஐ.பி.எஸ் அதிகாரியாக அரசியல்வாதியாக உயர்ந்து, இந்தச் சமூகத்துக்கு, இந்த மக்களுக்கு சேவையாற்ற வேண்டும்!

உங்களுடைய வெற்றி, தமிழ்நாட்டின் ஹிஸ்ட்டரியை சொல்லவேண்டும்! அதற்கு உங்களுக்கு சப்போர்ட்டாக, உங்கள் ஃபிரண்டாக, உங்கள் பேரண்ட்டாக, இந்த முத்துவேல் கருணாநிதி ஸ்டாலின் இருக்கிறேன்! இருப்பேன்!



■ கன்னியாகுமரி மாவட்ட ஆட்சியர் அலுவலக வருவாய் கூட்டரங்கில் மாண்புமிகு பால்வளத்துறை அமைச்சர் திரு.த.மனோ தங்கராஜ் அவர்கள் மாவட்ட ஆட்சித்தலைவர் திருமதி. ஆர்.அழகுமீனா, இ.ஆ.ப., அவர்கள் தலைமையில் பெற்றோர்களை இழந்த மாணவ மாணவியர்களுக்கு அன்புக்கரங்கள் திட்டத்தின் கீழ் உதவித்தொகை மற்றும் அடையாள அட்டை வழங்கினார்கள். உடன் குளச்சல் சட்டமன்ற உறுப்பினர் திரு.ஜே.ஜி.பிரின்ஸ் உட்பட பலர் உள்ளார்கள்




## மாவட்ட அளவிலான சப் ஜூனியர் இறகுப்பந்து போட்டியில் வெற்றி பெற்ற வீரர் மற்றும் வீராங்கனைகளுக்கு ஒரு லட்சம் ரூபாய் ரொக்க பரிசும் நினைவு கோப்பையும் வழங்கப்பட்டது

மாடம்பாக்கம், செப்.16-

செங்கல்பட்டு மாவட்டம் மாடம்பாக்கத்தில் உள்ள இறகு பந்து மைதானத்தில் மாவட்ட அளவிலான 13 வயதிற்குட்பட்ட சப் ஜூனியர் இறகு பந்து போட்டி நடைபெற்றது.

இப்போட்டியில் ஆடவர், மகளிர் தனி தனியாகவும், இரட்டையர், கலவை உள்ளிட்ட பல்வேறு பிரிவுகளில் கடந்த மூன்று நாட்களாக இறகு பந்து போட்டிகள் நடைபெற்றது. ஹரினா பேட்மிட்டன் அகாடமி சார்பில் நடைபெற்ற இந்த இறகு பந்து போட்டியில் சுமார் 100க்கும் மேற்பட்ட இறகு பந்து வீரர்கள் கலந்து கொண்டனர். ஒவ்வொரு பிரிவிலும் முதல் இரண்டு இடங்களை பிடித்த வீரர்களுக்கு சான்றிதழ்கள் மற்றும் பரிசுகள் வழங்கப்பட்டது.

வெற்றி பெற்ற வீரர் வீராங்கனைகளுக்கு ஒரு லட்ச ரூபாய் மதிப்பிலான ரொக்க பரிசு மற்றும் நினைவு கோப்பையை முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் சிட்லபாக்கம் ராஜேந்திரன், மற்றும் முன்னாள் அமைச்சர் டி கே எம் சின்னையா செங்கல்பட்டு மாவட்ட இறகு பந்து கழக மாவட்ட செயலாளர் நாகராஜன், மாவட்ட சீனியர் இறகு பந்து துணைத்தலைவர் ஆர்.ரவீந்தர் பாபு ஆகியோர் கலந்துகொண்டு வெற்றி பெற்ற வீராங்கனைகளுக்கு பரிசுகளை வழங்கி பாராட்டினர்.

## பழனி அருகே பல ஆண்டுகளாக குடியிருந்து வந்த வீடுகளை அகற்ற வந்த அதிகாரிகளிடம் எதிர்ப்பு தெரிவித்து பொதுமக்கள் சாலை மறியல்

### ஒருவர் தீக்குளிக்க முயன்றதால் பரபரப்பு ஏற்பட்டது





திண்டுக்கல், செப்.16-

திண்டுக்கல் மாவட்டம் பழனி அருகே உள்ள அழகாபுரியில் 6வது வார்டில் உள்ள நத்தம் புறம்போக்கு நிலத்தில், சுமார் 50க்கும் மேற்பட்ட குடும்பங்கள் பல ஆண்டுகளாக வசித்து வருகின்றனர். சமுதாயக் கூடம் கட்டுவதாகக் கூறி ஊராட்சி மன்றம் சார்பில் அங்கு குடியிருக்கும் வீடுகளை அகற்ற அதிகாரிகள் வந்தனர். அப்போது எதிர்ப்பு தெரிவித்து அப்பகுதி பொதுமக்கள் நூற்றுக்கும் மேற்பட்டோர் சாலை மறியல் போராட்டத்தில் ஈடுபட்டனர். அப்போது சக்திவேல் என்பவர் மண்ணெண்ணெய் ஊற்றி தீக்குளிக்க முயன்றதால் பரபரப்பு ஏற்பட்டது. இதனையடுத்து தீக்குளிக்க முயன்ற சக்திவேல் என்பவரிடம் மண்ணெண்ணெய் கேனை பிடுங்கி அவரை மீட்ட போலீசார் அவரை காவல் நிலையத்திற்கு அழைத்து சென்றனர். பழனி அருகே சமுதாயக் கூடம் கட்டுவதாக கூறி ஊராட்சி மன்ற அதிகாரிகள் வீடுகளை இடிக்க வந்ததற்கு எதிர்ப்பு தெரிவித்து சாலை மறியல் மற்றும் மண்ணெண்ணெய் ஊற்றி தீக்குளிக்க முயன்ற சம்பவம் பரபரப்பை ஏற்படுத்தி உள்ளது.

## பல்லாவரம் தெற்கு பகுதிகழக தேமுதிக சார்பில் கழகத்தின் 21ஆம் ஆண்டு துவக்க விழா மற்றும் நலதிட்ட உதவி வழங்கும் விழா, முப்பெரும் விழா

### சமபந்தி விருந்து நிகழ்ச்சியை மாவட்ட செயலாளர் அனகை முருகேசன் துவக்கி வைத்து ஏழை, எளிய மக்களுக்கு பிரியாணி வழங்கினார்





பல்லாவரம், செப்.16-

செங்கல்பட்டு மாவட்டம் பல்லாவரம் தெற்கு பகுதி தேமுதிக சார்பில் கழகத்தின் 21ஆம் ஆண்டு துவக்க விழா, நலதிட்ட உதவி வழங்கும் விழா, முப்பெரும் விழா மற்றும் சமபந்தி விருந்து. நிகழ்ச்சி தெற்கு பகுதி செயலாளர் செந்தில்குமார் தலைமையில் வைத்திய லிங்கம் பிரதான சாலையில். நடைபெற்றது. இந்நிகழ்ச்சிக்கு சிறப்பு அழைப்பாளராக செங்கல்பட்டு மாவட்ட கழக செயலாளர் அனகை முருகேசன் கலந்து கொண்டு கழக கொடியேற்றி, மறைந்த கேப்டன் விஜயகாந்த் அவர்களின் திருவுருவ படத்திற்கு பூஜை செய்து மலர்தூவி மரியாதை செலுத்தி. நலதிட்ட உதவிகளை வழங்கினார். இதனை தொடர்ந்து அன்ன தான நிகழ்ச்சியை துவக்கி வைத்து ஏழை, எளிய மக்களுக்கு பிரி யாணி. பரிமாறி அவர்களுடன் அமர்ந்து உணவருந்தினார். இந்நிகழ்ச்சியில் மாநில செயற்குழு உறுப்பினர் ஜெயக்குமார். முன்னாள் மாவட்ட துனை செயலாளர் தேவி, மாவட்ட மகளிரணி துனை செயலாளர் ராபியத் நாச்சியார், வார்டு செயலாளர் கிருஷ்ணமூர்த்தி, பகுதி தொண்டரணி துனைச் செயலாளர் இமானுவேல், அனகாபுத்தூர் பகுதி செயலாளர் மகாதேவன் மற்றும் கழக நிர்வாகிகள் உட்பட ஏராளமான பொதும க்கள் கலந்து கொண்டனர்.

## 10 தினங்களுக்கு குடிநீர் வினியோகம் இருக்காது

கன்னியாகுமரி, செப்.16-

நெடுஞ்சாலைத்துறை கட்டுமானம் மற்றும் பராமரிப்பு துறை மூலம் திங்கள்சந்தை புதுக்கடை சாலை கி.மீ 11/10 ல் திக்கணங்கோடு சந்திப்பில் பாலம் கட்டும் பணி நடைபெறுவதால் அவ்வழியாக செல்லும் 79 வழியோர கடலோர கிராமங்களுக்கான கூட்டு குடிநீர் திட்டத்தின் 500 மி.மீ விட்டமுள்ள குடிநீர் குழாய் மாற்றியமைக்க வேண்டியுள்ளதால் அந்த குடிநீர் திட்டத்திலிருந்து குடிநீர் வினியோகம் செய்யப்படும் அகஸ்தீஸ்வரம், அஞ்சுகிராமம், தென்தாமரைக்குளம், கல்லுக் கூட்டம், மண்டைக்காடு, திங்கள்நகர், வெள்ளி மலை, கணபதிபுரம், புத்தளம் பேரூராட்சிகளுக்கும் மற்றும் கோவளம், லீபுரம், மகாராஜபுரம், பஞ்சலிங்கபுரம், முட்டம், ஆத்திக்காட் டுவிளை, தர்மபுரம், மணக்குடி, பள்ளம், இராஜாக்கமங்கலம், திக்கணங்கோடு ஆகிய ஊராட்சிகளுக்கும் 10 தினங்களுக்கு குடிநீர் வினியோகம் இருக்காது என பொதுமக்களுக்கு தெரிவித்துக் கொள்ளப்படுகிறது.

## நான் முதல்வன் SCOUT திட்டம்: வெளிநாட்டு பயிற்சி எனது வெற்றியின் அடித்தளம் வெளிநாட்டில் பயிற்சி பெற்று வெற்றிகரமான வேலை வாய்ப்பு பெற்றமதுரை இளைஞர் பெருமிதம்





நான் முதல்வன் திட்டம் முதலமைச்சரின் கனவு திட்டமாக 2022 மார்ச் 1ஆம் தேதி அவரின் பிறந்த நாளில் துவக்கி வைக்கப்பட்டது. அதனைத் தொடர்ந்து மாணவர்களின் திறன்களை வளர்ப்பதற்கு பல்வேறு பயிற்சிகள் அளிக்கப்பட்டு வருகிறது. மேலும் மாணவர்களுக்கு திறன்களை வளர்க்கும் வகையில் தொடர்பு ஆங்கிலம், பொறியியல் மாணவர்களுக்கு தொழில் சார்ந்தப் திறன்களும் வளர்க்கப்படுகிறது. மாணவர்களுக்கு வேலை வாய்ப்பினை உருவாக்கும் வகையில் தொழில் திறன் பயிற்சியும் வழங்கப்படுவதுடன், நவீனத் தொழில் நுட்பத்திற்கு ஏற்ப பாடத்திட்டத்திலும் மாற்றங்கள் செய்யப்பட்டுள்ளன.

நான் முதல்வன் மற்றும் பிரிட்டிஷ் கவுன்சில் (British Council) இணைந்து நடத்திய S.C.O.U.T (Scholars for Outstanding Undergraduate Talent in Tamil Nadu) திட்டத்தின் கீழ், தமிழ்நாட்டின் பல்வேறு கல்லூரிகளில் இருந்து 100 மாணவர்கள் தேர்வு செய்யப்பட்டனர். இவர்கள் அனைவரும் முதலில் 24 மணி நேர ஆன்லைன் பயிற்சியில் பங்கேற்று, அதில் தேர்ந்தெடுக்கப்பட்ட 11 மாணவர்களும், 14 மாணவியர்களும் இங்கிலாந்தின் Durham பல்கலைக்கழகத்தில் தரவு அறிவியல் (Data Science) மற்றும் செயற்கை நுண்ணறிவு (Artificial Intelligence) ஆகிய முன்னணித் துறைகளில் ஒரு வார காலம் நேரடியாகப் பயிற்சி பெற்றனர்.

இத்திட்டம் தமிழ்நாட்டைச் சேர்ந்த திறமையான கல்லூரி மாணவர்களுக்குச் சர்வதேச அனுபவம் மற்றும் மேம்பட்ட திறன்களைப் பெறுவதற்கான அரிய வாய்ப்புகளைத் தந்துள்ளது. இத்திட்டத்திற்காக, மாணவர்களைத் தேர்வு செய்து, அவர்களின் பயணம், தங்குமிடம் மற்றும் பயிற்சி முதலிய செலவுகளை தமிழ்நாடு திறன் மேம்பாட்டுக் கழகம் மற்றும் பிரிட்டிஷ் கவுன்சில் ஆகிய இரண்டு நிறுவனங்களும் இணைந்து ஏற்றுக் கொண்டுள்ளன.

இத்திட்டத்தின் கீழ் மதுரை மாவட்டம், மேலூர் வட்டம், தும்பைப்பட்டியைச் சேர்ந்த சேக் அப்துல்லா அவர்கள் தெரிவிக்கையில்

நான், சேக் அப்துல்லா, மதுரை மாவட்டம், மேலூர் வட்டம், தும்பைப்பட்டியைச் சேர்ந்தவன். நான் நான்காம் ஆண்டு பொறியியல் படிக்கும் போது தமிழ்நாடு அரசின் நான் முதல்வன் - SCOUT திட்டம் 2024 வாயிலாக, எனக்கு லண்டனிலுள்ள டர்ஹாம் பல்கலைக்கழகத்தில் (Durham University, UK) ஒரு வாரம் நேரடி டேட்டா சயின்ஸ் மற்றும் மெஷின் லெர்னிங் பயிற்சியில் கலந்து கொள்ளும் அரிய சந்தர்ப்பம் கிடைத்தது.

அங்கு பயிற்சி பெற்ற காலத்தில், Python, Data Analytics, Predictive Modeling போன்ற துறைகளில் ஆழமான அறிவை பெற்றேன், டேட்டா சயின்ஸ் மற்றும் எம்.எல். மாடல்கள் தொடர்பான நடைமுறை திறன்களை கற்றுக்கொண்டேன், பிரச்சனைகளை தீர்க்க புதிய கோணத்தில் அணுகும் அனுபவத்தை பெற்றேன், உலக நிபுணர்களும், வெளிநாட்டு மாணவர்களும் இணைந்து செயல்பட்ட அனுபவம் எனக்கு மிகுந்த தன்னம்பிக்கையை அளித்தது.

இந்த சர்வதேச அனுபவத்தின் பலனாக, இன்று நான் மிகப்பெரிய தனியார் நிறுவனத்தில் Full Stack Developer ஆக பணியில் சேர்ந்துள்ளேன் என்பது என் வாழ்வின் மிகப்பெரிய வெற்றி.

இத்தகைய உலகளாவிய கற்றல் வாய்ப்பை எனக்கு அளித்த நான் முதல்வன் திட்டத்திற்கும், மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களுக்கும் எனது மனமார்ந்த நன்றியை தெரிவித்துக் கொள்கிறேன் என சேக் அப்துல்லா தெரிவித்தார்.

**வெளியீடு :**
**செய்தி மக்கள் தொடர்பு அலுவலர், மதுரை.**



## சிவகங்கை மாவட்டம் நெல் முடி கரை திருப்பாச்சேத்தி பொட்ட பாளையம், அரசனூர் ஆகிய துணை மின் துணை மின் நிலையங்களில் நாளை மின்தடை

சிவகங்கை, செப்.16-

திருப்புவனம், புதூர், பழையூர், செல்லப்பநேந்தல், லாடனேந்தல், அல்லிநகரம், கீழராங்கியம், மேலராங்கியம், வயல்சேரி, கலியாந்தூர், மேலவெள்ளூர், கீழவெள்ளூர், மாங்குடி, அம்பலத்தாடி, மணலூர், அகரம், ஒத்தவீடு, மடப்புரம், திருப்பாசேத்தி, பழையனூர், மாரநாடு, ஆவரங்காடு, தஞ்சாக்கூர் மேலச்சொரிக்குளம், வெள்ளிக்குறிச்சி, முதுவன் திடல். பொட்டபாளையம், புலியூர், கொந்தகை, கீழடி, சொட்டதட்டி, சைனாபுரம், கரிசல்குளம், காஞ்சிரங்குளம், முக்குடி, செங்குளம், அரசனூர், திருமாஞ்சோலை, இலுப்பக்குடி, பெத்தனேந்தல், ஏனாதி, படமாத்தூர், பச்சேரி, வேம்பத்தூர், பில்லூர், களத்தூர் ஆகிய துணை மின் நிலையங்களில் நாளை காலை 10 மணி முதல் மதியம் 2 மணி வரை மின்விநியோகம் இருக்காது என மின்செயற் பொறியாளர்கள் தெரிவித்துள்ளனர்..

## கன்னியாகுமரி மாவட்டம் ஆரோக்கியபுரம் மீனவ பெண்கள் 50 பேருக்கு நிழற்குடை கலப்பை மக்கள் இயக்க தலைவர் பி.டி.செல்வகுமார் வழங்கினார்

கன்னியாகுமரி, செப்.16-

கன்னியாகுமரி மாவட்டம் ஆரோக்கியபுரம் மீனவ கிராமத்தைச் சேர்ந்த கடற்கரை மற்றும் தெருக்களில் மீன் விற்பனை செய்யும் பெண்கள் வெயில், மழை காலத்தில் மீன்கள் கெட்டுப்போகாமல் இருக்கும் வகையில் நிழற்குடை வழங்குமாறு கலப்பை மக்கள் இயக்கத் தலைவர் பி.டி.செல்வகுமாரிடம் கோரிக்கை விடுத்தனர்.

இதையடுத்து ஆரோக்கியபுரம் ஆரோக்கிய அன்னை ஆலயத்தின் 10 ஆம் நாள் திருவிழாவின் போது காலை ஆலய வளாகத்தில் 50 பேருக்கு நிழற்குடை வழங்கும் நிகழ்ச்சி நடைபெற்றது.

இந்நிகழ்ச்சிக்கு ஆரோக்கியபுரம் ஆரோக்கிய அன்னை ஆலய பங்குத்தந்தை கிங்ஸ்லி ஷாஜூ தலைமை வகித்தார். கலப்பை மக்கள் இயக்க தலைவர் பி.டி.செல்வகுமார் 50 மீனவ பெண்களுக்கு நிழற்குடை வழங்கினார்.

இந்த நிகழ்ச்சியில் கன்னியாகுமரி மாவட்ட கலப்பை மக்கள் இயக்க தலைவர் வழக்கறிஞர் டி.பாலகிருஷ்ணன், ஆரோக்கியபுரம் பங்குப்பேரவை துணைத் தலைவர் அமல்ராஜ், பொருளாளர் மரியலில்லி, கலப்பை மக்கள் இயக்க மீனவரணி தலைவர் எட்வின், ஆரோக்கியபுரம் மகளிர் பிரிவு நிர்வாகிகள் மேரி, லிசி மற்றும்திரளான பொதுமக்கள்கலந்து கொண்டனர்.




■ வேலூர் மாவட்டம், வேலூர் தாலுகா, சத்துவாச்சாரி, மாவட்ட ஆட்சியர் அலுவலக வளாகத்திலுள்ள, பேரறிஞர் அண்ணா அவர்களின் பிறந்தநாளை முன்னிட்டு அவரது திருவுருவசிலைக்கு, மாவட்ட ஆட்சியர் சுப்புலட்சுமி, மலர் மாலை அணிவித்து, மலர் தூவி மரியாதை செலுத்தினர். இந்நிகழ்வின்போது ஆட்சியர் அலுவலக அலுவலர்கள் மற்றும் பணியாளர்கள் உட்பட பலர் உடனிருந்தனர்.

## திண்டுக்கலில் பேரறிஞர் அண்ணா பிறந்தநாள் விழா




திண்டுக்கல், செப்.16-

பேரறிஞர் அண்ணா அவர்களின் 117 வது பிறந்த நாளை முன்னிட்டு கழகத் துணைப் பொதுச் செயலாளர் மாண்புமிகு ஊரக வளர்ச்சித் துறை அமைச்சர் ஐ. பெரியசாமி BA BGL, மற்றும் திண்டுக்கல் கிழக்கு மாவட்ட கழக செயலாளர் பழனி சட்டமன்ற உறுப்பினர் ஐ.பி. செந்தில்குமார் MABL, வேடசந்தூர் சட்டமன்ற உறுப்பினர் காந்தி ராஜன், ஆகியோர் தலைமையில் திண்டுக்கல் மாநகரம் மணிக்கூண்டில் இருந்து பேரணியாக சென்று பேரறிஞர் அண்ணாவின் திரு வுருவ சிலைக்கு மாலை அணிவித்து மரியாதை செலுத்தினர்.. பின்னர் அதனைத் தொடர்ந்து திண்டுக்கல் மாநகரம் 13வது வார்டில் நடைபெற்ற தமிழ்நாட்டை தலைகுனிய விடமாட்டோம் என்று உறுதிமொழி ஏற்பு நிகழ்வில் பங்கேற்றனர்.... இந்த நிகழ்வில், மாவட்ட கழக அவைத்தலைவர் காமாட்சி மாவட்டக் கழக துணைச் செயலாளர்கள் நாகராஜன், மார்க்கெட் மேரி,பிலால் உசேன், மாவட்ட பொருளாளர் சத்தியமூர்த்தி, மாநகர செயலாளர் ராஜப்பா, வணக்கத்துக்குரிய மேயர் இளமதி ஜோதி பிரகாஷ், பகுதி கழகச் செயலாளர்கள் ஜானகிராமன், ராஜேந்திர குமார், பஜுலுல் ஹக் சூசைராபர்ட், ஒன்றியகழகச் செயலாளர்கள் நெடுஞ் செழியன், வெள்ளிமலை மாவட்ட இளைஞரணி அமைப்பாளர் கணேசன், மாவட்ட மாணவரணி அமைப்பாளர் பிரபாகரன், மற்றும் நகர பேரூர் ஒன்றிய கழக நிர்வாகிகள் வட்டக் கழக நிர்வாகிகள் சார்பு அணி நிர்வாகிகள், மற்றும் கழக நிர்வாகிகள் ஏராளமானோர் கலந்து கொண்டனர்

### மண்ணிவாக்கம் பெரி கலை மற்றும் அறிவியல் கல்லூரியில்

## 2வது ஆண்டாக ஆசிரியர் தினத்தை முன்னிட்டு நூற்று ஐம்பது ஆசிரியர்களுக்கு விருது வழங்கி கவுரவித்தனர்




மண்ணிவாக்கம், செப்.16-

செங்கல்பட்டு மாவட்டம் வண்டலூர் அடுத்த மண்ணிவாக்கம் பெரி கலை மற்றும் அறிவியல் கல்லூரியில் வெள்ளிக்கிழமை காலை 10 மணியளவில் 'ஆசிரியர் தின விழா'வை சிறப்பிக்கும் வகையில் இரண்டாம் ஆண்டு "பெரி பெருமை விருதுகள்" வழங்கும் விழா நிகழ்வு சீட்டா கலையரங்கில் நடைபெற்றது. இந்நிகழ்வில் பெரி கல்வி நிறுவனங்களின் நிறுவனர் மற்றும் மாண்பமைத்தலைவர் சரவணன் பெரியசாமி, தலைமைச் செயல் அலுவலர் சசிவீரராஜன் ஆகியோர் தலைமைத் தாங்கினர்.

இதில் சிறப்பு விருந்தினர்களாக தமிழக பள்ளிக்கல்வித்துறை இயக்குநர் முனைவர் ச.கண்ணப்பன் மற்றும் பட்டிமன்ற பேச்சாளர், நடுவர், திரைப்பட நடிகர் எஸ். ராஜா ஆகியோர் கலந்து கொண்டு சிறப்புரையாற்றினார்.

அதனை தொடர்ந்து சென்னை, செங்கல்பட்டு, காஞ்சிபுரம் உள்ளிட்ட 6 மாவட்டங்களில் இருந்து தெர்ந்தெடுக்கப்பட்ட நூற்று ஐம்பது அரசு மற்றும் தனியார் பள்ளிகளில் பணியாற்றும் தலைமையாசிரிகள், ஆசிரியர்களுக்கு பெரி பெருமை விருதுகளை சிறப்பு விருந்தினர்கள் வழங்கி கௌரவித்தனர்.

பெரி கலை அறிவியல் கல்லூரின் முதல்வர் முனைவர் அ.புரு ஷோத்தமன் நிகழ்ச்சியை ஒருங்கிணைத்தார். இவ்விழா நிகழ்வில் பெரி கல்வி நிறுவனங்களின் முதல்வர்கள், துறைத்தலைவர்கள், கல்லூரியின் பேராசிரியர்கள், மாணவ, மாணவிகள், நிர்வாக அலுவலர்கள் என அனைவரும் கலந்துகொண்டு சிறப்பித்தனர்.

பின்னர் செய்தியாளர்களிடம் பேசிய பட்டிமன்ற பேச்சாளர் எஸ்.ராஜா கூறும்போது இரண்டாவது ஆண்டாக பெரி கல்வி குழுமம் மாணவர்கள் மூலமகாவே சிறந்த ஆசிரியர்களை தெர்ந்தெடுத்து விருது வழங்குவது பெருமைக் குரியது என்றார்.



# வேலூரில், தமிழக அரசின் அன்புகரங்கள் திட்டம் துவக்கம்

## பயனாளர் 177 குழந்தைகளுக்கு அடையாள அட்டை மற்றும் கல்வி உபகரணங்களை வழங்கினர்

வேலூர், செப்.16-

வேலூர் மாவட்டம், வேலூர் தாலுகா, சத்துவச்சாரி, ஜே.பி.எம் தனியார் திருமண மஹாலில் நடைபெற்ற நிகழ்ச்சியில், தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் பெற்றோரை இழந்து, மற்றொரு பெற்றோரால் பாரமரிக்க இயலாத குழந்தைகளுக்கு 18 வயது வரை மாதம் ரூ.2000/ உதவித்தொகை வழங்கும் அன்புகரங்கள் திட்டத்தை சென்னையில் தொடங்கி வைத்ததை தொடர்ந்து வேலூர் மாவட்டத்தில் அன்பு கரங்கள் திட்டத்தில் பயனடையவுள்ள 177 குழந்தைகளுக்கு அடையாள அட்டை மற்றும் கல்வி உபகரணங்களை மாவட்ட ஆட்சியர் சுப்புலெட்சுமி (15.09.2025) வழங்கினார். இந்நிகழ்ச்சியில் வேலூர் சட்டமன்ற உறுப்பினர் ப.கார்த்திகேயன், மாநகராட்சி மேயர் சுஜாதா ஆனந்தகுமார், குழந்தைகள் உரிமைகள் பாதுகாப்பு ஆணைய உறுப்பினர் மருத்துவர் மோனா பாஸ்கர், மாவட்ட குழந்தைகள் பாதுகாப்பு அலுவலர் சஞ்ஜித், முதன்மை கல்வி அலுவலர் தயாளன், முறை சார்ந்த அலுவலர்கள் மற்றும் பணியாளர்கள் உட்பட பலர் கலந்து கொண்டனர்.



# இராமநாதபுரம் மாவட்ட ஆட்சியர் அலுவலக கூட்டரங்கில் மாவட்ட ஆட்சித்தலைவர் சிம்ரன்ஜீத் சிங் காலோன் தலைமையில் மக்கள் குறைதீர்க்கும் நாள் கூட்டம்

இராமநாதபுரம், செப்.16-

இராமநாதபுரம் மாவட்ட ஆட்சியர் அலுவலக கூட்டரங்கில் மாவட்ட ஆட்சித்தலைவர் திரு.சிம்ரன்ஜீத் சிங் காலோன்,இ.ஆ.ப., அவர்கள் தலைமையில் மக்கள் குறைதீர்க்கும் நாள் கூட்டம் நடைபெற்றது. இக்கூட்டத்தில் மாவட்ட ஆட்சித்தலைவர் அவர்கள் பொதுமக்களிடம் பல்வேறு கோரிக்கைகள் குறித்த 257 மனுக்கள் பெற்று மனுதாரரின் முன்னிலையில் மனுக்களை விசாரணை செய்து தொடர்புடைய அலுவலர்களிடம் மனுக்களை வழங்கி உரிய நடவடிக்கையினை விரைந்து மேற்கொள்ள அலுவலர்களுக்கு உத்தரவிட்டார்.

இக்கூட்டத்தில் வீட்டுமனை பட்டா, முதியோர் உதவித்தொகை, தனிநபர் வீடு வழங்கும் திட்டம், குடிநீர் இணைப்பு வழங்குதல் உள்ளிட்டவை தொடர்பாக பொதுமக்கள் மனுக்களை அளித்தனர். மாவட்ட ஆட்சித்தலைவர் அவர்கள் தெரிவிக்கையில், ஒவ்வொரு வாரமும் பொதுமக்களிடம் பெறக்கூடிய மனுக்களுக்கு உரிய நடவடிக்கை மேற்கொண்டு ஒருமாத காலத்திற்குள் மனுதாரர்களுக்கு உரிய தீர்வு வழங்கிட வேண்டும் எனவும், தீர்வு வழங்க முடியாத மனுக்கள் நிலை குறித்து மனுதாரர்களிடம் அலுவலர்கள் எடுத்துரைக்க வேண்டும் எனவும் அலுவலர்களுக்கு அறிவுறுத்தினார். மேலும் பொதுமக்கள் வழங்கும் மனுக்களுக்கு துறைசார்ந்த அலுவலர்கள் சிறப்பு கவனம் எடுத்து செயல்பட வேண்டுமென மாவட்ட ஆட்சித்தலைவர் அவர்கள் தெரிவித்தார்.

இக்கூட்டத்தில் மாவட்ட வருவாய் அலுவலர் திரு.இரா.கோவிந்தராஜலு அவர்கள், மாவட்ட சமூக பாதுகாப்புத்திட்ட தனித்துணை ஆட்சியர் திருமதி.கிருஷ்ணகுமாரி அவர்கள், மாவட்ட வழங்கல் அலுவலர் திரு.மணிமாறன் அவர்கள் மற்றும் அரசு அலுவலர்கள் உட்பட பலர் கலந்து கொண்டனர்.

## தமிழ்நாடு முதலமைச்சர் தாயுமானவர் திட்டத்தின் ஒரு பகுதியாக, அன்புக்கரங்கள் திட்டத்தினை சென்னையில் தொடங்கி வைத்ததைத் தொடர்ந்து

# தேனி மாவட்டத்தில் மாவட்ட ஆட்சித்தலைவர் ரஞ்ஜீத் சிங் பயனாளர்களுக்கு அடையாள அட்டையினை வழங்கினார்

தேனி, செப்.16-

தமிழ்நாடு முதலமைச்சர் சென்னை கலைவாணர் அரங்கில் நடைபெற்ற அரசு விழாவில், தாயுமானவர் திட்டத்தின் ஒரு பகுதியாக, பெற்றோரை இழந்த குழந்தைகள் 18 வயது வரையிலான பள்ளிப் படிப்பை இடைநிற்றல் இன்றி தொடர மாதம் ரூ.2,000 உதவித்தொகை வழங்கிடும் "அன்புக்கரங்கள்" திட்டத்தை தொடங்கி வைத்தார்கள். அதனைத் தொடர்ந்து, தேனி மாவட்ட ஆட்சியரக கூட்டரங்கில் மாவட்ட ஆட்சித்தலைவர் ரஞ்ஜீத் சிங், இ.ஆ.ப., அவர்கள் அன்புக்கரங்கள் திட்டத்தின் கீழ் பயனாளர்களுக்கு அடையாள அட்டையினை வழங்கினார்.

தமிழ்நாடு முதலமைச்சர், மாணவர்களின் நலனுக்காக எண்ணற்ற திட்டங்களை செயல்படுத்தி வருகிறா ர்கள். அந்தவகையில் இன்றைய தினம் பெற்றோரை இழந்த குழந்தைகளின் கல்வி நலனை கருத்தில் கொண்டு, அவர்களுக்கு மாதந்தோறும் உதவி த்தொகை வழங்கும் அன்புக்கரங்கள் திட்டத்தை தொடங்கி வைத்துள்ளார்கள்.

உதவித் தொகை என்பது வெறும் நிதி உதவி மட்டுமல்ல, அவை திறமை, மற்றும் கடின உழைப்பை அங்கீகரிப்பதாகும். இது போன்ற உதவித்தொகைகள் தனிப்பட்ட வாழ்க்கை மற்றும் கல்வி வளர்ச்சியில் முக்கிய பங்கு வகிக்கின்றது.

அந்தவகையில், அன்புக்கரங்கள் திட்டத்தின் கீழ் தேனி மாவட்டத்தில் பெற்றோரை இழந்து தங்களது உறவினர்களின் பாதுகாப்பில் வளர்ந்துவரக்கூடிய 240 குழந்தைகள் தெரிவு செய்யப்பட்டு, உதவித்தொகை பெறுவதற்கான பயனாளர் அடையாள அட்டை வழங்கப்பட்டுள்ளது. இக்குழந்தைகளுக்கு 18 வயது நிறைவடையும் வரை மாதந்தோறும் ரூ.2,000 குழந்தைகளின் வங்கிக் கணக்கில் நேரடியாக செலுத்தப்படும்.

மேலும், பள்ளிப்படிப்பு முடித்தவுடன் கல்லூரிக் கல்வி மற்றும் உரிய திறன் மேம்பாட்டுப் பயிற்சிகளும் அவர்களுக்கு வழங்கிட அன்புக்கரங்கள் திட்டத்தின்கீழ் நடவடிக்கை மேற்கொள்ளப்படும் என தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்நிகழ்வில், மாவட்ட வருவாய் அலுவலர் திருமதி ஐ.மகாலட்சுமி, இணை இயக்குநர் (மருத்துவம் மற்றும் ஊரக நலப்பணிகள்) மரு.கலைச்செல்வி, மாவட்ட குழந்தைகள் பாதுகாப்பு அலுவலர் திரு.மதியழகன், முன்னோடி வங்கி மேலாளர் திரு.விஜயசேகர் உள்ளிட்ட பலர் கலந்து கொண்டனர்.

# GM செஸ் அகாடமி சார்பில் மாவட்ட அளவிலான சதுரங்க கணினி பயிற்சி வகுப்பு நடைபெற்றது



கௌரிவாக்கம், செப்.16-

GM செஸ் அகாடமி சார்பில் அதன் செயலாளர் மற்றும் செங்கல்பட்டு மாவட்ட சதுரங்க கழக துணை செயலாளருமான மாசிலாமணி அவர்களின் ஏற்பாட்டில் மாவட்ட அளவிலான சதுரங்க கணினி பயிற்சி வகுப்பு செங்கல்பட்டு மாவட்ட சதுரங்க கழக ஆதரவுடன் தாம்பரம் அடுத்த கௌரிவாக்கம் பிரின்ஸ் ஸ்ரீ வெங்கடேஸ்வரா கலை மற்றும் அறிவியல் கல்லூரியில் 13.,09.2025 சனிக்கிழமை அன்று நடைபெற்றது காலை 9 மணி அளவில் தொடங்கிய இந்த பயிற்சி வகுப்பை பிரின்ஸ் ஸ்ரீ வெங்கடேஸ்வரா கலை மற்றும் அறிவியல் கல்லூரி துணை தலைவர் முனைவர் பிரசன்னா வெங்கடேஷ்,தாம்பரம் மாநகராட்சி 39 வது வார்டு கவுன்சிலர் திருமதி கிரிஜா சந்திரன், தாம்பரம் ஆயுதப்படை காவல் துணை ஆணையர் ராதாகிருஷ்ணன், செங்கல்பட்டு மாவட்ட சதுரங்க கழக தலைவர் ராஜாராமன், செயலாளர் கிருஷ்ணமூர்த்தி, துணைத் தலைவர் வழக்கறிஞர் சந்திரசேகர், பிரின்ஸ் ஸ்ரீ வெங்கடேஸ்வரா கல்லூரியின் முதல்வர் முனைவர் கல்பனா, மற்றும் காஞ்சிபுரம் மாவட்ட சதுரங்க கழக செயலாளர் ஜோதி பிரகாசம் ஆகியோர் துவக்கி வைத்தனர்.

செங்கல்பட்டு மாவட்டத்தைச் சேர்ந்த சுமார் 30 பேர் பயிற்சியாளர்களாக ஆர்வத்துடன் கலந்து கொண்ட இந்த பயிற்சி வகுப்புகளை சர்வதேச சதுரங்க நடுவர் மற்றும் தமிழ்நாடு மாநில சதுரங்க கழக முன்னாள் செயலாளருமான ஹரிஹரன், சர்வதேச சதுரங்க நடுவரும் தமிழ்நாடு மாநில சதுரங்க கழகத்தின் முன்னாள் பொருளாளர் ஸ்ரீவத்சன் மற்றும் சர்வதேச சதுரங்க நடுவரும் சர்வதேச மாற்றுத்திறனாளிகள் சதுரங்க சங்கத்தின் செயலாளருமான திரு. ஆனந்த் பாபு ஆகியோர் சிறப்பான முறையில் அனைவருக்கும் எளிதில் புரியும் வகையில் வகுப்புகளை சிறப்பாக எடுத்தனர்.

இந்த பயிற்சி வகுப்பு தங்களுக்கு மிகவும் பயனுள்ளதாக இருந்தது என பயிற்சிக்காக வந்தவர்கள் தங்களுடைய கருத்தை தெரிவித்தனர். இதுவரையில் இது போன்ற முறைப்படி நடக்கும் வகுப்புகளை நாங்கள் பார்த்ததில்லை, கேட்டதில்லை என மகிழ்ச்சியுடன் தெரிவித்தனர்.மேலும் இது போன்ற வகுப்புகள் எங்களுக்கு ஒரு நாள் நடத்தினால் போதாது தொடர்ந்து இதுபோன்ற வகுப்புகளை நடத்த வேண்டும் எனவும் இது எங்களுக்கு மிகவும் பயனுள்ளதாக இருந்தது எனவும் தெரிவித்தனர் வகுப்புகள் மிகவும் எளிமையாகவும் புரியும் படியும் இருந்தது என தெரிவித்ததோடு பயிற்சி ஆசிரியர்களுக்கு தங்களுடைய நன்றிகளையும் தெரிவித்தனர் இந்த வகுப்புகள் மாலை 5 மணிக்கு நிறைவு பெற்றது .

முடிவில் முன்னாள் உலக மகளிர் செஸ் சாம்பியனும் முன்னாள் திருவள்ளுவர் மாவட்ட கல்வி அதிகாரிமான மலர்விழி ஹரிஹரன் அவர்கள் அனைவரையும் வாழ்த்தி பேசினார்.

சர்வதேச சதுரங்க நடுவர் ஆனந்த் பாபு அவர்கள் நன்றி தெரிவித்து பயிற்சி வகுப்புகள் இனிதே நிறைவு பெற்றனர்



■ திருப்பூர் மாவட்டம் தாராபுரம் அனைத்திந்திய அண்ணா திமுக சார்பில் பேரறிஞர் அண்ணா அவர்களின் 117 ஆவது பிறந்தநாள் விழாவை முன்னிட்டு 4வது வார்டு பகுதியில் இருந்து அண்ணா சிலை வரை ஊர்வலம் ஊர்வலம் நடைபெற்றது நிகழ்வில் சி.ராஜேந்திரன், மாவட்ட பொருளாளர் சின்னப்பன்,திருப்பூர் கிழக்கு மாவட்ட இணைச் செயலாளர் திருமதி சத்தியபாமா, மாவட்ட செயலாளர் அமைப்பு சாரா ஓட்டுனர் அணி மாவட்ட செயலாளர் பங்கு மகேஷ், திருப்பூர் புறநகர் கிழக்கு மாவட்ட அண்ணா தொழிற்சங்க தலைவர் இ பி பழனிக்குமார், நகரப் பொருளாளர் சாமுவேல், மாவட்ட மாணவரணி துணைச் செயலாளர் ஜாகீர் அப்பாஸ், நகர மகளிர் அணி செயலாளர் கௌரி சித்ரா அவர்கள், நகர இளைஞரணி செயலாளர் தினேஷ் குமார் அவர்கள், சாமுவேல் மற்றும் கட்சித் தொண்டர்கள் ஐ டிவிங்க் நகர செயலாளர் திலீப் குமார் பொதுமக்களும் பெருந்திரளாக ஒரு காலத்தில் கலந்து கொண்டனர் மேலும் அண்ணா சிலை அருகில் அருகே அமைக்கப்பட்டிருந்த அண்ணாவின் திருவுருவப்படத்திற்கு மலர் தூவி மரியாதை செலுத்தினர்



## தென்காசி மாவட்டம் குற்றாலம் பேரூர் கழக செயலாளர் குட்டி என்ற சங்கர் ஓரணியில் தமிழ்நாடு உறுப்பினர் சேர்கையில்

# சிறப்பாக செயல்பட்டதை பாராட்டி தலைவர் தளபதி விருதினை திமுக தென்மண்டல செயலாளர் கனிமொழி கருணாநிதி வழங்கினார்

தென்காசி, செப்.16-

தமிழ்நாட்டு மக்களை அநீதி களுக்கு எதிராக ஒன்றிணைக்கும் ஒப்புயர்விலா செயல் திட்டத்தின் கீழ் நம் மண், மொழி மானம்,காக்க, "ஓரணியில் தமிழ்நாடு" எனும் மாபெரும் முன்னெடுப்பை திமுக தொடங்கியுள்ளது.

ஒவ்வொரு வாக்காளரையும் ''ஓரணியில் தமிழ்நாடு'' என்று பிரசார இயக்கத்தில் இணைக்க நிர்வாகிகளுக்கு அறிவுறுத்தப்பட்டுள்ளது. இது தொடர்பாக தென்காசி தெற்கு மாவட்ட திமுக பாக முகவர்கள் ஆலோசனைக் கூட்டம் நடந்தது. கூட்டத்தில் குற்றாலம் பேரூர் கழகத்தில் ஓரணியில் உறுப்பினர் சேர்க்கையில் சிறப்பாக செயல்பட்டதற்காக தலைவர் தளபதியார் விருது குற்றாலம் பேரூர் கழக செயலாளர் குட்டி என்ற சங்கருக்கு திமுக தென்மண்டல செயலாளர் கனிமொழி கருணாநிதி வழங்கினார். நிகழ்ச்சியில் வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மை துறை அமைச்சர் கே.கே.எஸ்.எஸ்.ஆர் ராமசந்திரன், மாவட்ட செயலாளர் ஜெயபாலன் உட்பட பலர் கலந்து கொண்டு சிறப்புரை ஆற்றினார்கள்.

குற்றாலம் பேரூர் கழக செயலாளர் குட்டி என்ற சங்கர் நன்றியை தெரிவித்தார்.



# காளையார்கோவில் தெற்கு ஒன்றிய திமுக சார்பில் பேரறிஞர் அண்ணா பிறந்தநாள் விழா உறுதிமொழி ஏற்பு

## ஒசெ. யோக.கிருஷ்ணகுமார் தலைமையில் கோதண்டபாணி, மு.கி.ரமேஷ், தோக்கப்பன், முப்பையூர் சிவா பங்கேற்பு

காளையார் கோவில், செப்.16-

சிவகங்கை மாவட்டம் காளையார்கோவில் தெற்கு ஒன்றியக்கழக திமுக சாரபில் பேரறிஞர் அண்ணா பிறந்தநாள் விழா சிறப்பாக கொண்டாடப்பட்டது...

பேரறிஞர் அண்ணா அவர்களது திருஉருவப்படத்திற்கு மாலை அணிவித்து, மலர்தூவி மரியாதை செலுத்தப்பட்டது.. ஓரணியில் தமிழ்நாடு என்ற கழகத்தலைமையின் முன்னெடுப்பின் உறுதிமொழி ஏற்றனர்.

செங்குளம், சாத்தரசன்கோட்டை, பெரியகண்ணனூர், காஞ்சிரம் , சேத்தூர், மறவமங்கலம் , புரசடை உடைப்பு சமத்துவபுரம் ஆகிய இடங்களில் நடைபெற்றது..

இந்நிகழ்வில் தெற்கு ஒன்றிய செயலாளர் யோக. கிருஷ்ணகுமார் தலைமையில் நடைபெற்ற இந்த நிகழ்ச்சியில் ஒன்றிய துணைச்செயலாளர் கோலாந்தி தொழிலதிபர் கோதண்டபாணி மாவட்ட பிரதிநிதி வழக்கறிஞர் மு.கி. ரமேஷ், மாவட்ட பிரதிநிதி தோக்கப்பன் , தொகுதி ஐடி விங் ஒருங்கிணைப்பாளர் முப்பையூர் சிவா ,டாஸ்மாக் செல்வராஜ் ,மறவமங்கலம் சர்க்காரியா , ஜோதிராலிங்கம் ,ஐயப்பன், கருணாநிதி , மாணவரணி சொக்கு ரமேஷ் , பொறியாளரணி துணை அமைப்பாளர் அரிஹரன் , பிடிஏ ஆல்வின்சுதன் , விஜயகுமார் , சேத்தூர் கோபால் நவநீதன், , ஏரிவயல் கண்ணன்,திருநாவுக்கரசு, மாவட்டம் சிறியூர் அழகர்சாமி உள்ளிட்ட ஏராளமான பெண்கள் மற்றும் நிர்வாகிகள் கலந்து கொண்டனர்...

## அழகப்பா பல்கலைக்கழக நாட்டு நலப் பணித் திட்டத்தின் சார்பில்,

# ஐந்து நாள் சாகச முகாமிற்கான துவக்க விழா



காரைக்குடி, செப்.16-

அழகப்பா பல்கலைக்கழக நாட்டு நலப் பணித் திட்டத்தின் சார்பில், வரும் 2025, செப்டம்பர் 14 முதல் 18 வரை நீலகிரி மாவட்டம் குன்னூரில் உள்ள சாரணர் பயிற்சி மையத்தில் நடைபெறவுள்ள ஐந்து நாள் சாகச முகாமிற்கான துவக்க விழா (13.09.2025) காரைக்குடி அறிவியல் வளாகத்தில் அமைந்துள்ள சர் சி.வி. ராமன் கருத்தரங்க கூட்டத்தில் நடைபெற்றது.

பல்கலைக்கழகத்தின் துறைகள் மற்றும் இணைப்புக் கல்லூரிகளில் இருந்து தேர்வு செய்யப்பட்ட 50 நாட்டு நலப் பணித் திட்ட தன்னார்வலர்கள் இந்த வரலாற்று சிறப்புமிக்க முகாமில் பங்கேற்க உள்ளனர்.

விழாவைத் தொடங்கி வைத்த அழகப்பா பல்கலைக்கழக துணைவேந்தர் பேரா. க. ரவி அவர்கள், இத்தகைய சாகச முகாமை முதல் முறையாக நடத்திய நாட்டு நலப் பணித் திட்டப் பிரிவை பாராட்டினார். "ஆரோக்கியமான உடலில் தான் ஆரோக்கியமான மனம் வாழ்கிறது" எனக் குறிப்பிட்ட அவர், தாம் பள்ளி நாட்களில் நாட்டு நலப் பணித் திட்டத்தில் ஈடுபட்ட அனுபவங்களையும், நெடுந்தூர சைக்கிள் பயணத்தில் பங்கேற்றதையும் நினைவுகூர்ந்தார். மேலும் மலை ஏறுதல், நடைப்பயணம் போன்ற செயல்களில் முன்னோட்டத் தயாரிப்பின் அவசியத்தை வலியுறுத்தி, தன்னார்வலர்களுக்கும் ஏற்பாட்டாளர்களுக்கும் வாழ்த்துத் தெரிவித்தார்.

தேர்வாணையர் பேரா. எம். ஜோதி பாசு சிறப்புரை ஆற்றினார். முகாமின் போது ஒழுக்கமும் உடல்நலனும் முக்கியம் என்பதை வலியுறுத்திய அவர், தன்னார்வலர்கள் சமூக விழிப்புணர்வில் முன்மாதிரியாக இருக்க வேண்டும் என்றும், இளைஞர்கள் போதைப்பொருள் எதிர்ப்பு இயக்கத்தில் ஈடுபட்டு தூய்மையான, போதைப்பொருள் இல்லா சூழலை உருவாக்க வேண்டும் என்று கேட்டுக்கொண்டார்.

அழகப்பா பல்கலைக்கழக உடற்கல்விக் கல்லூரி முதல்வரும் தமிழ்நாடு உடற் கல்வி மற்றும் விளையாட்டு பல்கலைக்கழக முன்னாள் துணைவேந்தருமான பேரா. எம். சுந்தர் வாழ்த்துரை ஆற்றி, சாகச முகாமிற்கான ஆயத்தங்களை விரிவாக எடுத்துரைத்தார்.

விழாவில் பங்கேற்ற நாட்டு நலப்பணித் திட்ட தன்னார்வலர்களுக்கு துணைவேந்தர் க. ரவி டிஷர்ட்களை வழங்கினார்.

முன்னதாக, நாட்டு நலப் பணித் திட்ட ஒருங்கிணைப்பாளர் முனைவர் எம். நடராஜன் வரவேற்புரை ஆற்றினார். முகாமிற்கான ஏற்பாடுகளைச் செய்த உயிரியல் தகவலியல் உதவி பேராசிரியரும் நாட்டு நலப் பணித் திட்ட அலுவலருமான முனைவர் பா. பூமி நன்றியுரை ஆற்றினார்.

அறிவியல் வளாக இயக்குநர் முனைவர் எம். சிவகுமார் மற்றும் முனைவர் எம். மகேந்திர பிரபு, முனைவர் ஜி. விநாயகமூர்த்தி, முனைவர் சு. மூர்த்தி, முனைவர் ஷாமினா, முனைவர் மேரி சுஜி ஆகிய நாட்டு நலப் பணித் திட்ட அலுவலர்கள் கலந்து கொண்டனர்.



# சிவகங்கையில் "தாயுமானவர்அன்புக்கரங்கள்" திட்ட விழாவை துவக்கி வைத்த அமைச்சர்

சிவகங்கை, செப்.16-

சென்னை கலைவாணர் அரங்கில் இன்று நடைபெற்ற அரசு விழாவில் தமிழ்நாடு அரசின் "தாயுமானவர்" திட்டத்தின் கீழ்"அன்புக்கரங்கள்" திட்டத்தினை தமிழ்நாடு முதலமைச்சர் மு. க. ஸ்டாலின் நேற்று துவக்கி வைத்தார்.

ஒரு பகுதியாக, பெற்றோரை இழந்த குழந்தைகள் 18 வயது வரையிலான பள்ளிப் படிப்பு முடியும் வரை இடைநிற்றல் இன்றி கல்வியை தொடர மாதம் ரூ.2,000 உதவித்தொகை வழங்கி "அன்புக்கரங்கள்" திட்டத்தை தொடங்கி வைத்து, விழாப் பேருரை ஆற்றினர் மேலும், தமிழ்நாடு முதலமைச்சர் பெற்றோர் இருவரையும் இழந்து 12 ஆம் வகுப்பு முடித்து, பல்வேறு உயர்கல்வி நிறுவனங்களில் தமிழ்நாடு அரசின் முயற்சியால் சேர்க்கப்பட்டுள்ள மாணவ / மாணவியர்களுக்கு மடிக் கணினிகள் வழங்கினார் அதன் தொடர்ச்சியாக சிவகங்கை மருதுபாண்டியர் மேல்நிலைப்பள்ளியில் தமிழக கூட்டுறவுத்துறை அமைச்சர் பெரிய கருப்பன் துவக்கி வைத்தார். உடன் மாவட்ட ஆட்சியர் பொற்கொடி, மானாமதுரை சட்டமன்ற உறுப்பினர் தமிழரசி ரவிக்குமார், காரைக்குடி எம்எல்ஏ மாங்குடி,சிவகங்கை நகர் மன்ற தலைவர் துரை ஆனந்த் திருப்புவனம் பேரூராட்சி மன்ற தலைவர் சேங்கை மாறன் மாவட்ட கல்வி அலுவலர் (பொறுப்பு) மாரிமுத்து, மாவட்ட குழந்தைகள் பாதுகாப்பு அலுவலர் துரைசிவகங்கை திமுக ஒன்றிய செயலாளர் முத்துராமலிங்கம் ஜெயராமன் துரை சார்ந்த அலுவலர்கள் ஆசிரியர்கள் பெற்றோர்கள் மாணவர்கள் ஆகியோர் கலந்து கொண்டனர்...

# மானாமதுரையில் அரசு பள்ளி மாணவிகள் கட்டணம் இன்றி சிலம்பம் கற்றுக் கொள்ளலாம்






மானாமதுரை, செப். 16-

சிவகங்கை மாவட்டம் மானாமதுரை சீனி ஆசான் சிலம்பம் பள்ளியின் சார்பில் தற்காப்பு கலைகள் கற்றுக் கொடுக்கப்பட்டு வருகிறது.அரசு பள்ளிகளில் 6 ஆம் வகுப்பு முதல் 9 ஆம் வகுப்பு வரை பயிலும் மாணவிகளுக்கு அரசே ஏற்று நடத்துகிறது. பெண்கள் தங்களை பாதுகாத்துக் கொள்ள, சிலம்பம் போன்ற எளிய தற்காப்புக் கலைகளை கற்றுக் கொள்வது மிகவும் அவசியமாகும் சிலம்பம், கராத்தே, குங்பூ ஆகிய மூன்றும் பெண்கள் கற்றுக் கொள்ளக்கூடியவை தான். இவற்றுள் சிலம்பமே முதன்மையானது. ஏனெனில், கராத்தே, குங்பூ கற்றுக்கொள்ள உடற்பயிற்சி செய்ய வேண்டும்; ஆனால், சிலம்பம் கற்றுக் கொள்ளும் போது, உடற்பயிற்சியும் இயல்பாகவே சேர்ந்து விடுகிறது. சிலம்பத்தை அந்தக் காலத்திலிருந்தே இருபாலரும் பயன்படுத்தி வந்துள்ளனர். சிலம்பம் கற்றவர், தம் கையில் ஒரு கம்பு வைத்திருப்பது, 10 ஆட்கள் உடன் இருப்பதற்குச் சமம். பத்தடி தள்ளி நின்றால் கூட, அவர்களால் எதிராளியை அடையாளம் கண்டு தாக்க முடியும். எளிமையான, அதேசமயம் மன வலிமையோடும் கற்றுக்கொள்ளக் கூடிய கலை சிலம்பம். அலங்கார வரிசை, குத்து வரிசை, அடி வரிசை, பிடி வரிசை என, வரிசைகள் சிலம்பத்தில் உண்டு. ஒவ்வொரு வரிசையையும், ஒவ்வொரு ஆறு மாதக் காலத்தில் கற்று, நான்கு ஆண்டில் முழுமையாக சிலம்பக் கலையை கற்றுக் கொள்ள முடியும். ஆர்வத்தை பொறுத்து, 5 முதல், 14 வயது வரை உள்ள பெண்கள் மிகவும் எளிதாகக் கற்றுக் கொள்ளலாம். 5 வயதிலிருந்து குழந்தைகளுக்கு இக்கலையை கற்றுக் கொடுப்பது மிகவும் சிறந்தது.' பெண்கள் கம்போடு எல்லா இடங்களுக்கும் செல்ல முடியுமா' என பலருக்கும் சந்தேகம் எழலாம். சிலம்பாட்டத்தில் குத்துப் பயிற்சி என்ற ஒரு முறை இருக்கிறது. கைகளால் எதிராளியை அடிக்கக் கற்றுத் தரப்படுகிறது. கம்புக்கு பதிலாக, கையைப் பயன்படுத்தி தாக்குவது. இதில் கையால் பிடி போடுவது என்ற வித்தை முறைகள் இருக்கின்றன. சிலம்பத்தில் யானை, புலி, குரங்கு பயிற்சி என்றும் வித்தை முறை இருக்கிறது. இந்தப் பயிற்சியில், கையால் அடிப்பது கற்றுத் தரப்படும். கையை பிடித்து அடிப்பது, பிடி வைத்து அடிப்பது, யானை, புலி, குரங்கு, பாம்பு போன்ற விலங்குகள் சண்டையிடும் முறைகளை வைத்து, அதனடிப்படையில் வித்தைகள் கற்றுத் தரப்படுகின்றன. அதிகமான பிடி வரிசைப் பாடங்கள், யானையிடமிருந்தே பெற்றுக் கொள்ளப்படுகின்றன. கராத்தே, குங்பூவை விட, சிலம்பம் கற்றுக் கொள்ளும் போது, நரம்புகளுக்கு நெகிழ்வுத் தன்மை கிடைக்கும். எதிரியிடம் இருந்து விலகி நின்று, சுற்றிச் சுற்றி அடிக்கலாம்; இதனால் எதிராளியை எளிதாகத் தாக்க முடியும் என்று சிலம்ப பள்ளி பயிற்றுநர்கள் தெரிவிக்கின்றனர்..

# டாக்டர் இராதாகிருஷ்ணன் விருது பெற்ற ஆசிரியர்களுக்கான பாராட்டு விழா: மாவட்ட ஆட்சியர் பங்கேற்பு



தென்காசி, செப்.16-

தென்காசி மாவட்டத்தில் டாக்டர் ராதாகிருஷ்ணன் விருது பெற்ற ஆசிரிய ஆசிரியைகள் மற்றும் 10 ஆம் வகுப்பு மற்றும் 12 ஆம் வகுப்பு மாணவர்களை 100 விழுக்காடு தேர்ச்சி மற்றும் 100 மதிப்பெண்களை முழுமையாகப் பெறவைத்த ஆசிரியர்களுக்கு பாராட்டு விழா மாவட்ட ஆட்சியர் ஏ.கே.கமல்கி ஷோர், தலைமையில் நடைபெற்றது.

இது பற்றிய விவரம் ஆவது

தென்காசி மாவட்டம் வாசுதேவநல்லூர் தனியார் கல்லூரியில் தென்காசி மாவட்டத்தில் சென்ற கல்வியாண்டில் பயின்ற 10 ஆம் வகுப்பு மற்றும் 12 ஆம் வகுப்பு மாணவர்களை 100 விழுக்காடு தேர்ச்சி மற்றும் 100 மதிப்பெண்களை முழுமையாகப் பெறவைத்த அரசு, அரசு உதவிபெறும் பள்ளி ஆசிரியர்களுக்கு பாராட்டு விழா மற்றும் டாக்டர் இராதாகிருஷ்ணன் விருது பெற்ற ஆசிரியர்களுக்கான பாராட்டு விழா மாவட்ட ஆட்சியர் ஏ.கே. கமல்கிஷோர், தலைமையில் ST கல்வி குழும தாளாளர் முருகேசன் முன்னி லையில் நடை பெற்றது. இவ்விழாவில் பொதுத் தேர்வில் 100 சதவீதம் தேர்ச்சி பெற வைத்த சாதனையாளர்களை வாழ்த்தி பாராட்டுச் சான்றிதழ் மற்றும் கேடயங்களை மாவட்ட ஆட்சியர் ஏ.கே. கமல் கிஷோர் வழங்கினார். ஆழ்வார்குறிச்சி ஸ்ரீ பரமகல்யாணி மகளிர் மேல்நிலைப் பள்ளியில் பட்டதாரி தமிழ் ஆசிரியையாக பணியாற்றி வரும் இ .சுபா 100% மாணவிகளை தேர்ச்சி பெற வைத்ததற்காக பாராட்டு சான்றிதழ் வழங்கி மாவட்ட ஆட்சியர் கௌரவித்தார் இவ்விழாவில், மாவட்ட முதன்மைக் கல்வி அலுவலர் எல்.ரெஜினி, மாவட்டக் கல்வி அலுவலர்கள் க.கண்ணன் (இடைநிலைக்கல்வி), மரகதவல்லி (தொடக்கக்கல்வி), அருள்செல்வன் (தனியார் பள்ளிகள்), தங்கப்பழம் மருத்துவக் கல்லூரி முதல்வர் டாக்டர். ரத்ன பிரகாஷ், ஏ.வி.எஸ் உயர்நிலைப் பள்ளித் தலைமையாசிரியர் அருள் சாமுவேல், தென்மலை, அரசு மேல்நிலைப் பள்ளித் தலைமையாசிரியர்

பூமாரி, ஆலங்குளம், அரசு மேல்நிலைப் பள்ளி முதுகலை ஆசிரியர் மாரிச்செல்வம், செங்கோட்டை அரசு ஆண்கள் மேல்நிலைப் பள்ளி ஆசிரியை வேலம்மாள், கடையநல்லூர் ரத்னா உயர்நிலைப் பள்ளி தலைமையாசிரியை சக்தி வடிவு, மேலப்பாவூர், அரசு மேல்நிலைப் பள்ளித் தலைமையாசிரியர் பாக்கியநாதன் மற்றும் வெள்ளாளன்குளம், அரசு மேல்நிலைப் பள்ளித் தலைமையாசிரியர் நாராயணன்,ஆலங்குளம் அரசு மேல்நிலைப்பள்ளி தலைமை ஆசிரியை மற்றும் பள்ளி ஆசிரிய ஆசிரியைகள் கலந்து கொண்டனர்.



# சிவகங்கை மாவட்டத்தில் முதலமைச்சர் கோப்பை சிலம்ப போட்டியில் அதிக பதக்கங்களை வென்று முதலிடத்தைப் பெற்றது வீரவிதை சிலம்ப அணி

சிவகங்கை, செப்.16-

கல்லூரிக்கான 5565எடை பிரிவில் சிவா முதல் இடத்தையும்,4050 பெண்கள் எடை பிரிவில் தாட்சாயிணி மூன்றாம் இடத்தையும்.

பள்ளிக்கூட ஆண்கள் பிரிவில் 75க்கு மேல் எடை பிரிவில் மன்னர் சிவா முதல் இடத்தையும், 4555 எடை பிரிவில் திருகார்த்திக் இரண்டாம் இடத்தையும்,6575 எடை பிரிவில் ஜிஷ்ணு இரண்டாம் இடத்தையும், பெண்கள் 6070 எடை பிரிவில் ஜெயஸ்ரீ முதல் இடத்தையும் பெற்று அகாடமிக்கு பெருமை சேர்த்துள்ளார்கள். இதில் முதலிடம் பெற்றவர்கள் மாநில அளவிலான போட்டிக்கு தகுதி பெற்றுள்ளார்கள். இரண்டாவது முறையாக அதிக பதக்கங்களை வென்று சிவகங்கை மாவட்டத்தில் முதலிடம் பெற்றது வீரவிதை சிலம்ப அணி. இதற்க்கு பயிற்சியளித்த மாஸ்டர் கலைவளர்மணி டாக்டர் பெருமாளையும், வெற்றி பெற்ற மாணவர்களையும் பெற்றோர்கள், ஊர்ப் பொதுமக்கள் பாராட்டினார்கள்...



■ திருப்பூர் கட்சியின் நிர்வாகிகளை நேரடியாக சந்திக்க அதிமுக பொதுச் செயலாளர் எடப்பாடி பழனிச்சாமி திருப்பூர் வருகை புரிந்தார் அவரை வரவேற்ற கொங்கு மெயின் ரோடு கட்சி நிர்வாகி சொக்கலிங்கம் பூங்கொத்து கொடுத்து வரவேற்றார்..

# வேலூர் மாநகராட்சி 8வார்டு பகுதி மக்கள் சபா கூட்டம்: அடிப்படை வசதிகளை செய்து தர மக்களுடன் துணை மேயர் சுனில்குமார்



வேலூர், செப்.16-

வேலூர் மாவட்டம், காட்பாடி தாலுகா, காட்பாடி தெற்கு பகுதி 8வார்டு, வேலூர் மாநகராட்சி, மண்டலம் 1, 8வார்டு பகுதி மக்கள் சபா கூட்டம், காட்பாடி தெற்கு பகுதி திமுக செயலாளரும், வேலூர் மாநகராட்சி துணை மேயருமான எம்.சுனில்குமார் தலைமையில் நடைபெற்றது. பொதுமக்கள் திரளாக கலந்து கொண்டு தங்களின் மேலான அடிப்படை வசதிகள் கொண்ட குடிநீர் வசதி, கழிவு நீர் கால்வாய் வசதி, குப்பைகளை அகற்றக்கோரி, தெரு மின்விளக்குகள் வசதிகள் செய்து தர கோரியும், வீடு இல்லாதவர்களுக்கு வீட்டுமனை பட்டாக்கள் வழங்க கோரி, முதியோர் உதவித்தொகை வராதவர்களுக்கு இந்த உதவி தொகை பெற்று தரவும், மகளிர் உரிமைத்தொகை தகுதியுடைய நபராக இன்னும் பெறாமல் இருந்தால் அவர்களுக்கு பெற்றுத் தரவும் உள்ளிட்ட 29 கோரிக்கைகளை முன்வைத்து இந்த மக்கள் சபா கூட்டம் நடைபெற்றது. இதில் அவர்களின் கோரிக்கைகளை நிறைவேற்றும் வண்ணம் ஒவ்வொரு கோரிக்கைக்கும் பதில் அளித்து துணை மேயர் சுனில்குமார் தீர்மானங்களை வாசித்தார். இதனை முன்மொழிந்து உடனடியாக நிறைவேற்றப்படும் என மாநகராட்சி ஊழியர்கள் உறுதியளித்தனர். இக்கூட்டத்தில் மாநகராட்சி உதவி ஆணையர் (பொறியாளர்) ஜெயகுமார், சுகாதார ஆய்வாளர் ஷாம்கர்னல் ஆகியோர் கலந்து கொண்டு, கோரிக் கைகளை நிறைவேற்றுவதாக உறுதியளித்தனர். அடிப்படை வசதிகளை செய்து தர மக்களுடன் துணை மேயர் சுனில்குமார்... பொதுமக்கள் நலன் கருதி மாநகராட்சி பராமரிப்பு அடிப்படை வசதிகளுக்காக அமைக்கப்பட்டுள்ள காண்ட்ராக்டர்கள் முறையாக மக்களுக்கான பணிகளை மேற்கொள்வதில்லை என குற்றஞ் சாட்டி வருகின்றனர். இந்நிகழ்ச்சியில் 8வது வார்டு பகுதி பொதுமக்கள், வட்ட செயலாளர் சசிகுமார், சிறுபான்மை நல உரிமை பிரிவு துணை அமைப்பாளர் முன்னா பாஷா, மாநகரப் பிரதிநிதி ஸ்டீல் ஒர்க் தொழிலதிபர் ரமேஷ், துணை வட்ட செயலாளர்கள் கார்த்தி கேயன், ஆர்.சுரேஷ், கார்த்தி, மாநகர இளைஞரணி துணை அமைப்பாளர் கே.சி.சுரேஷ், மாநகர அலுவலக அணி தலைவர் குணா (எ)குணசேகரன், மாநகர தொழிலாளர் அணி அமைப்பாளர் விவேகானந்தன், மாநகர மாணவரணி துணை அமைப்பாளர் சதீஷ், 8வது வட்ட பொருளாளர் ராஜா சங்கர், மாணவரணி அமைப்பாளர் சாந்தகுமார், மாணவரணி துணை அமைப்பாளர் வட்டப் பிரதிநிதி ராஜேந்திரன் மற்றும் மக்கள் பிரதிநிதிகள், திமுக நிர்வாகிகள், உறுப்பினர்கள் என பலர் கலந்து கொண்டு இந்த பகுதி சபா கூட்டத்தை சிறப்பித்தனர்.



# கடையநல்லூர் நகராட்சி பகுதியில் 3 கோடி ரூபாய் மதிப்பீட்டில் தார் சாலை அமைக்கும் பணி நகர மன்ற தலைவர் துவக்கி வைத்தார்

தென்காசி, செப்.16-

தென்காசி மாவட்டம் கடையநல்லூர் நகராட்சிக்கு உட்பட்ட அனைத்து பகுதிகளிலும் ரூபாய் 2 கோடியே 71 லட்சம் மதிப்பீட்டில் தார்சாலை அமைக்கும் பணியில் APM@CO கம்பெனியின் மூலம் 1_கோடியே_38_லட்சம் மதிப்பீட்டில் தார் சாலை அமைக்கும் பணியில் முதற் கட்ட_பணியினை 28_வது வார்டு அயோத்தியாநகர் பகுதியில் கடையநல்லூர் நகர் மன்ற தலைவர் மூப்பன்ஹபீபுர்ரஹ்மான் அவர்கள் துவக்கி வைத்து இனிப்பு வழங்கனார் மற்றும் 26வது வார்டு உறுப்பினர் ராமகிருஷ்ணன் மற்றும் 29 வது வார்டு நகர மன்ற உறுப்பினர் மற்றும் நகர இளைஞரணி துணை அமைப்பாளர் மற்றும் 9 வது வார்டு கழகச் செயலாளர் சுகுமார் மற்றும் முருகானந்தம் 26 வது வார்டு கழகச் செயலாளர் பாலசுப்பிரமணியன் மற்றும் 28 வது வார்டு கழக முன்னோடி மற்றும் கழகத் தோழர்கள் மற்றும் ஊர் நாட்டாமைகள் மற்றும் நிர்வாகிகள் மற்றும் இளைஞர் அணியைச் சார்ந்த சகோதரர்கள் மற்றும் வார்டு பொதுமக்கள் மற்றும் APM@CO உரிமையாளர் மாலையப்பன் அனைவரும் தார்ச்சாலை அமைக்கும் பணியில் கலந்து கொண்டனர்..

# கன்னியாகுமரி மாவட்டம் பூதப்பாண்டி அருகே முதியவர் மாயம்



கன்னியாகுமரி, செப்.16-

கன்னியாகுமரி மாவட்டம் பூதப்பாண்டி அருகே மாயமான முதியோரை போலீசார் தேடி வருகின்றனர். பூதப் பாண்டி அருகே மார்த் தால் பரதர் தெருவை சேர்ந்தவர் மாணிக்கம். (94). வயது மூப்பின் காரணமாக சில நேரங் களில் வீட்டிலிருந்து அருகே உள்ள இடங்க ளுக்கு சென்று விடுவார். இதனை அறிந்து அவ ரது மனைவி மோகனா. அவரை வீட்டிற்கு அழைத்து வருவது வழக்கமாக இருந் துள்ளது. சம்பவத் தன்று மாணிக்கம் வீட்டை விட்டு வெளியே சென்று உள்ளார். நீண்ட நேரம் ஆகியும் மாணிக்கத்தை காணாததால் அவ ரது மனைவி மோகனா அக்கம் பக்கத்தில் தேடி உள்ளார். எங்கு தேடி யும் மாணிக்கத்தை கண் டுபிடிக்க முடியாததால் பூதப்பாண்டி போலீசில் புகார் செய்தார். இதன டிப்படையில்போலீசார் வழக்கு பதிவு செய்து காணாமல் போன மாணிக்கத்தை தேடி வருகின்றனர்.



# கன்னியாகுமரி மாவட்டம் கொட்டாரம் அரசு மேல்நிலைப் பள்ளிக்கு சொந்த நிதியில் பி.டி. செல்வகுமார் கலையரங்கத்திற்கு அடிக்கல் நாட்டினார்

கன்னியாகுமரி, செப்.16-

கன்னியாகுமரி அடுத்த கொட்டாரம் அரசு மேல்நிலைப் பள்ளி கலையரங்கத்திற்கு சொந்த நிதியில் கலப்பை மக்கள் இயக்கம் நிறுவனத் தலைவர் டாக்டர்.பி.டி.செல்வகுமார் அடிக்கல் நாட்டினார்.

தலைமை ஆசிரியர் பேன்சி ஹெப்சிபா டேவிட் தலைமை தாங்கினார், உதவி தலைமை ஆசிரியர் அகஸ்டின்செல்வகுமார் முன்னிலை வகித்தார், இந்நிகழ்வில், குமரி மாவட்ட தலைவர் வாக்கில் பாலகிருஷ்ணன், அகஸ்தீஸ்வரம் ஒன்றிய செயலாளர் செந்தில் மோகன், மற்றும் அனைத்து ஆசிரியர்கள், மாணவர்கள், பெற்றோர் ஆசிரியர் கழக தலைவர் சிதம்பரம், பள்ளி மேலாண்மை குழு தலைவர், ரேவதி மற்றும் உறுப்பினர்கள், கல்வியாளர் பாலசுப்ரகர், முன்னாள் மாணவர் பரமசிங், ராஜசேகர், உறுப்பினர்கள் லிங்க ராணி, சாம்சன், ரூபி, மற்றும் பலர் கலந்து கொண்டனர்.

Printed by A.PONRAJ, published ,owned by A.PONRAJ and printed at "SRI SAAI PRINTERS"No.122,Neethipathi, Rajasekaran Street,vaarasanthai road,Sivaganga and published at 6 a, madurai road Sivaganga, Sivaganga district,Editor A.PONRAJ. Ph: 8508502161